# றக்கிங் என்பது பல்கலைக் கழக மாணவர்களின் ஒரு பண்பாட்டு அம்சமா ?

பல்கலைக் கழகத்திற்கு வருடாவருடம் படிப்பதற்காக தெரிவு செய்யப்படுகிற மாணவர்கள் தெரிவுகள் ஒழுங்காக நடைபெறுகின்றனவோ இல்லையோ, வருடாவருடம் பட்டம் பெற்று வெளியேறும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகள் ஒழுங்காகக் கிடைக்கிறதோ இல்லையோ,

கல்வி கற்றுக்கொண்டிருக்கிற மாணவர்களுக்கு கற்பதற்கு ஒழுங்கான கல்வி புகட்டப்படுகிறதோ இல்லையோ,

மாணவர்கள், தமது உரிமைகளை முழுமையாக அனுபவிக்க முடிகிறதோ இல்லையோ,

இதுபற்றி இட்டவட்டமாக எதுவும் கூறமுடியா விட்டாலும் வருடாவருடம் ஒன்றுமட்டும் நடந்துகொண்டிருக்கிறது. அதுதான் பல்கலைக்கழக மாணவர்களினால் புதிய மாணவர்கள்மீது நடத்தப்படும் றக்கிங் என்ற 'வதை'

எமது பல்கலைக் கழகத்தில், எல்லா வருடங்களையும் போலவே இம்முறையும் இந்த றக்கிங் மிகவும் கோலாகலமாகநடாத்தப்படுகிறது. புதியமாணவர்கள் ஆண்களாக இருந்தால், 'அவர்களது மீசையை வழிப்பித்தலில் தொடங்கி அவர்களை நிர்வாணப்படுத்தி அவமானப்படுத்துகிற வரையும், பெண்களாக இருந்தால் அவர்களது பாலியல் உறுப்புகள் பற்றிய 'புளூபிலிம்' பாணி காட்சிகளை அவர்கள் முன்னால் நேர்முகவர்ணனை செய்தல் முதல், தூஷண வார்த்தைகளை அவர்கள் வாய்களால் உச்சரிக்கச் செய்கிற மகத்தான செயல்களை எப்பாடுபட்டாவதோ (ஏசியோ, உருட்டி மிரட்டியோ) செய்விப்பது வரையில்' (இவை பல்கலைக்கழக மட்டத்தில் மிகவும் நாகரிகமான பண்பாட்டம்சங்களாக கருதப்படுகின்றன) இந்த றக்கிங்களின் அளவுகள் வேறுபடும்.

இவற்றைச் செய்ய மறுப்பவர்களை, தொடர்ந்து கம்பஸில் கல்வி கற்பதில் இடைஞ்சல் படுவீர்கள் என எச்சரித்தோ, பழித்தோ, அடித்து மிரட்டியோ அடக்கிவிட முயலும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்ந்து கொண்டிருக்கிறது. 'கம்பஸ்' என்றால் இப்படித்தான் என்றுகூறி, இதே நடைமுறைகள் தொடர்ச்சியாக (இவை வருடாவருடம் பெருகுபெறும்) நடந்து வருகின்றன. இதன் காரணமாக விரக்தியுற்றவர்கள், மனநோய்க்காளானவர்கள் தற்கொலைசெய்தவர்கள் என்று இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றில் பல உதாரணங்கள் இருந்தபோதும், இது தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில்– அதுவும் தமிழ்மக்கள் மீது இனமும் உயிர்ப் படுகொலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்த பூமியில் மிகவும் களிப்பூட்டும் ஒரு விழாவாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது!

கேட்டால், இது கம்பஸ் பண்பாடு, கம்பஸிக்கு வருபவர்கள் இதற்கேற்ப நடந்துதான் ஆகவேண்டும். கட்டுப்பட்டு நடக்காவிட்டால் இது மோசமான விளைவுகளைத் தந்துவிடும். ஒருவர் கட்டுப்பட்டு நடக்கா விட்டால்கூட, பல்லாயிரக்கணக்கில் செலவுசெய்து குடிபோதைகளுடன் மிகவும் சிறப்பாக நடாத்தப்படும் பண்பாட்டுக் கருவூலமான அந்த மகத்தான 'சோசல்' நடாத்தப்படாமலே போய்விடும் என்றும் பிறகு படிப்பதற்கு கிடைப்பதாகக் கூறப்படும் இரண்டாம் வருட மாணவர்களின் உதவி கிடைக்காமலே போய்விடும் என்றும் சில அப்பாவிகள், ஏமாற்றப்பட்டு, ருக்கிங்கை எப்படியாவது வாங்கி விடுவதுண்டு. தம்மீது செய்யப்பட்ட ருக்கிங்கினால் ஏற்பட்ட பழிவாங்கும் உணர்வை இதுபற்றி எந்த உணர்வுமின்றி (பண்பாடு என்று பிதற்றிக் கொண்டு) அடுத்தவருட மாணவன் மீது எப்படித்திணிப்பது என்ற கற்பனையுடன் இவர்கள் ருக்கிங்கை வாங்கிக் கொள்கிறார்கள்.

**விளைவு என்ன?**

ஒவ்வொரு வருடமும் ருக்கிங் எதிர்ப்புக்குள்ளாகிறது. அடுத்தவருடமும் எதிர்த்தவர்களாலேயே தொடரப்பட்டு மீண்டும் எதிர்ப்புக் குள்ளாகிறது. ஆனால் ருக்கிங் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறது!

இந்த ருக்கிங்கை சுவாரசியமாக செய்து கொண்டிருக்கும் நண்பர்களைப் பார்த்து சில கேள்விகளை கேட்க விரும்புகிறோம். இந்தக்கேள்விகளுக்கு நெஞ்சைத்தொட்டு பதில் சொல்லிக்கொள்ளுமாறு அவர்களைக் கோருகிறோம். நாம் சொல்லும் நியாயங்களை சற்று சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளுமாறு அனைத்து மாணவ நண்பர்களையும் கேட்டுக்கொள்கிறோம்!

உண்மையில் உங்கள் ருக்கிங்கின் நோக்கம் என்ன?

புதிய மாணவர்களுடன் இரண்டறக் கலந்து நண்பர்களாகப் பழக, தங்களது பாடசாலை வாழ்க்கையின் கட்டுப்பெட்டித் தனங்களை அகற்றி பது மனிதர்களாக அவர்களை சிந்திக்கவைக்க இது உதவுகிறது என்று நீங்கள் கூறலாம். அல்லது, இதேபோன்ற வேறெதும் காரணங்களை நீங்கள்கூற முயலலாம்.

ஆனால் உண்மை உங்களுக்குத் தெரியுமோ என்னவோ, இவைகளைவிட வேறானது.

பல்கலைக் கழகம் என்பது வாழ்க்கையை, விஞ்ஞானத்தை கற்றுக்கொள்ள உருவாக்கப்பட்டது என்பதைவிட, ஆளும்வர்க்கத்திற்கும் அரசுக்கும் சேவகம் செய்யும் அதிகாரிகளை உருவாக்கவே இலங்கைபோன்ற பின்தங்கிய நாடுகளில் ஏகாதிபத்தியவாதிகளால் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த அதிகார வர்க்கங்கள் முதலாளித்துவ நடைமுறைகளை செவ்வனே பாதுகாக்க, ஏகாதிபத்திய பண்பாட்டம்சங்களை, புதிய அடிமை முறைகளை இங்கு அறிமுகப்படுத்துவது அவசியமானது. முதலாளித்துவ உற்பத்திமுறை, நிர்வாக முறைகளில் அதிகாரத்துவம் கோலோச்சுவதற்கு வாய்ப்பாகவே; கீழ்மட்ட ஊழியர்களுக்கு உரிமைகள் குறைவாக வழங்கப்படுகின்றன. கட்டுப்பாடு, ஒழுங்கு என்றபெயரால், அதிகாரவர்க்கத்தின் அடக்கு முறைகள் அங்கீகரிக்கப்படுகின்றன. சுரண்டல் கொள்ளைகட்கு சாதகமாக நிர்வாகஒழுங்கு என்று பிதற்றியபடியே நடக்கும் இச்செயல்கள், இன்று ஏகாதிபத்திய இறக்குமதிப் பண்பாட்டின் ஒரு அம்சமே!

இந்த அதிகாரத்துவப் பண்பாட்டு நடைமுறைகளை, பல்கலைக் கழகத்திலேயே நீங்கள் நடத்தத்தொடங்கி விட்டீர்கள் என்பதுதான் உண்மை!

பெண்களை நோக்கி நீங்கள் கேட்கும் 'கேவலமான கேள்வி' களுக்கு காரணம் என்ன?

பெண்கள் மிகவும் கூச்சமாகவும், வெளிப்படையாக பேசாதவர்களாகவும் இருக்கிறார்கள், இவர்கள் இயல்பாகவே பழக, சுதந்திரமாக கருத்தை தெரிவிக்க இது வாய்ப்பளிக்கும் என்று நீங்கள் கருதலாம்!

ஆனால், சற்றுச்சிந்தித்துப் பாருங்கள் உங்களால் காலாகாலமாக நடத்தப்படும் இந்த ராக்கிங் எவ்வளவு பெண்களை திருத்திவிட்டது?

உண்மை என்னவென்றால், கிராமிய நிலப்பிரபுத்துவப் பண்பாடு பெண்களை அடிமைகளாகக் கருதுகிறது. முதலாளியப் பண்பாடு அவர்களை சந்தைப் பொருட்களாகப் பார்க்கிறது. உங்கள் ராக்கிங் கேள்விகள், ச(ந்)தைப் பொருட்களாகவும், அடிமைகளாகவும் கருதும் கலப்பான பிற்போக்குத் தனத்தின் வெளிப்பாடேயன்றி வேறல்ல. உங்களது கேள்விகள் பெண்கள் பற்றிய ஏகாதிபத்தியங்களின் காமவிகாரப் பண்பாட்டுப் பிரச்சாரங்களில் இருந்து பெற்ற வக்கிரமான மன உணர்வுடன் வெளிப்படுகிறதே அன்றி, அவர்களையும் நண்பர்களாகமதித்து சமதையாக மனம்விட்டு அளவலாவி அறிமுகமாகிக் கொள்ளும் நோக்குடன் செய்யப்படுவதில்லை. ஏகாதிபத்தியங்களை, உள்நாட்டு பிற்போக்கு ஆளுங்கும்பல்களும் திட்டமிட்ட வகையில் மக்களின் உணர்வுகளை திசைதிருப்பவும் தமது கொள்ளைகளை தொடரவும் உருவாக்கி விட்டுள்ள கலாச்சார பண்பாட்டு அம்சங்கள் பல (தமிழ், ஆங்கில) திரைப்படங்கள், சஞ்சிகைகள் மூலமாக அறிமுகமாகும் ஏமாற்றுக் கலை 'வடிவங்கள் மக்களை வெறியர்களாக்கி சீரழிவுப் பாதையில் இட்டுச்செல்லும் நோக்குடன் அறிமுகப்படுத்தப் படுபவையே.

இவைகளின் பிரச்சாரங்களில்தான், பெண்கள்பற்றி, பாலியல் விவகாரங்கள் பற்றி, அநீக ஹிரோத்தன செயற்பாடுகள் பற்றி, வெறியூட்டும் கீழ்த்தரமான இசைபற்றிய பிரச்சாரங்கள் அடங்குகின்றன! இவைகளைக் கேட்டு, பார்த்து, பழகிப்போய் நீங்களும், உங்கள் மனதை வக்கிரப்படுத்தி சீரழித்து விட்டு, இன்று அதை 'பண்பாடு' என்ற பெயரில் அரங்கேற்றுகிறீர்கள். இதற்காக நீங்கள் வெட்கப்பட மாட்டீர்கள்... கூச்சப்பட மாட்டீர்கள்... ஏனென்றால்—

'முதுகாட்டில் காக்கை உவக்கும் பிணம்!'

பெண்களிடம் கேவலமாகப் பேசும் ராக்கிங் நண்பர்களே! நீங்கள் உங்கள் மனைவியையோ, தங்கையையோ இவ்வாறு பேசும் சந்தர்ப்பங்களில் எப்படி இதைப்புரிந்து கொள்வீர்கள்? உதாரணத்திற்கு ஒன்று; ஒரு மாணவியின் மேலாடைகளை அவள் எவ்வாறு கண்ணாடி முன்நின்று களற்றுவாள் என்று அவள் முன்னாலே லேசாகவே பேசும் நீங்கள் உங்கள் தங்கையின் மேலாடை களற்றப்படுவதைப் பற்றி யாராவது பேசினால் என்ன செய்வீர்கள்?

உங்களிடம்வரும் புதிய மாணவர்கள் அடிமைகளாக நடக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பது, எப்படி ஒற்றுமைக்கு வழிவகுக்கும்?

அடக்குபவனும் அடக்கப்படுபவனும் ஒற்றுமையாக இருக்கமுடியுமென்றால் (அது எந்தக் காரணமாக இருந்தாலும்கூட) எமது மக்களின் இன்றைய போராட்டத்திற்கு ஏது அர்த்தம்?

சனநாயக உரிமைக்காகப் போராடும் எமது மக்களின் விடுதலைபற்றிப் பேசிக்கொண்டே, சகமாணவர்களுக்கு சனநாயக உரிமைகளை மறுத்து வதைசெய்வது (அது எவ்வளவு சிறிதாயினும் கூட) எந்தவிதத்தில் சரியானது?

நீங்கள் நாளைக்கு மாணவர்களின் சனநாயக உரிமைக்காக எந்த முகத்துடன் குரல் கொடுக்கமுடியும்?

யாழ் பல்கலைக்கழகம் தொடங்கிய காலத்திலிருந்தே, அதற்கு ஒரு போராட்டப் பாரம்பரியம் இருந்துவந்துள்ளது. தமிழ்மக்கள் மீதான தேசிய ஒடுக்குமுறை வடிவங்களை எதிர்த்து பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்ச்சியாக போராட்டங்களை நடாத்தி வந்துள்ளார்கள். இந்த பண்பே, பல்கலைக்கழகம் பற்றிய தமிழ்பேசும் மக்கள் மத்தியில் ஒரு 'நல்லபிப்பிராயத்தை' உருவாக்க காரணமாக இருந்தது.

ஆனால் சமீப காலங்களாக, எல்லா மலட்டுக் கல்விக்கூடங்களையும் போலவே, அனைத்து சீரழிவுகளினதும் விளைநிலமாகும் விதத்தில் யாழ் பல்கலைக்கழகமும் மாறிக் கொண்டிருக்கிறதா?

தமிழீழ மக்களின்மீதான தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான அனைத்து மாணவர்களதும் ஒருமித்த எதிர்ப்பு போராட்டத்தையும் கட்டியெழுப்பும் விதத்தில், யாழ்பல்கலைக் கழகத்தின் போராட்டப் பாரம்பரியத்தை மீள உருவாக்கப் போராடப் போகிறோமா? அல்லது இந்த றக்கிங்கிலேயே ஈடுபடப் போகிறோமா?

கேள்விகள் பலவற்றை அடுக்கிக் கொண்டு போகலாம். ஆனால், சிந்திக்க விரும்புபவர்களுக்கு இதுவேபோதும்!

ஒன்றைமட்டும் மறந்து விடாதீர்கள்: பிறரை அடக்குவதை எதிர்க்கும் எவனும் தன்மீதான அடக்குமுறைக் கெதிராக போராடியே தீருவான்!

**றக்கிங்கால் பாதிக்கப்பட்ட மாணவர்கள்**
**முதல் வருடம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்**